செய்தி வெளியீடு எண் :2105 நாள் : 23.11.2022

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் மற்றும் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மறுகட்டுமானம் செய்யப்பட உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் 392 குடியிருப்புதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.94.08 லட்சம் காசோலைகளை வழங்கினர்

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் மற்றும் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் இன்று (23.11.2022) தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய கொய்யாதோப்பு மற்றும் காக்ஸ் காலனி திட்டப்பகுதிகளில் மறுகட்டுமானம் செய்யப்பட உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் 392 குடியிருப்புதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.94.08 லட்சம் காசோலைகளை வழங்கினர்.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் பேசுகையில் சென்னை மாநகரில் குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் கான்கீரிட் வீடுகளில் வாழ வேண்டும் என்ற நல்ல நோக்கில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முதலாக தொடங்கப்பட்டது. இந்த வாரியம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது . நாவலர் நெடுஞ்செழியன் நகர் திட்டப்பகுதி 1990 ஆம் ஆண்டு கட்டப்பட்டு கிட்டதட்ட 32 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. சிந்தாதிரிப்பேட்டை 1979 ஆம் ஆண்டு கட்டப்பட்டு 43 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இரண்டு திட்டப்பகுதியிலும் 392 குடியிருப்புகள் உள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் குடிசைப் பகுதி மாற்று வாரியமாக இருந்த வாரியத்தின் பெயரை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியமாக மாற்றினார். இந்த வாரியத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 1,73,000 வீடுகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் வாரிய வீடுகள் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆனதால் பழுதாகி உள்ளன என கோரிக்கைகள் வைத்தனர். அக்கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பழுதடைந்த வீடுகள் ஆய்வு செய்ய குழு ஒன்றை நியமித்தார். அக்குழுவின் ஆய்வின் அடிப்படையில் சென்னையில் மட்டும் 27,138 அடுக்குமாடி குடியிருப்புகளும் , இதர பகுதிகளில் 3354 வீடுகளும் மக்கள் வாழ தகுதியற்ற வீடுகளாக உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகளை கடந்த நிதி நிலை அறிக்கையில் அறிவித்த படி ரூ.1200 கோடியில் 7500 வீடுகளும், நடப்பாண்டு ரூ.1200 கோடியில் 7500 வீடுகளும் ஆக மொத்தம் ரூ.2400 கோடி மதிப்பீட்டில் 15000 அடுக்குமாடி குடியிருப்புகள் மறுகட்டுமானம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏற்கெனவே எங்கெல்லாம் வீடுகள் இடிக்கப்படுகின்றதோ அந்த பகுதியில் மீண்டும் அதே மக்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இக்குடியிருப்புதாரர்களுக்கு மறுகட்டுமான காலங்களில் வெளியே வாடகையில் தங்குவதற்காக கடந்த கால ஆட்சியில் ரூ.8000 வழங்கப்பட்டு வந்த கருணைத் தொகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்த்தி ஒரு குடும்பத்திற்கு ரூ.24,000 வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் 392 குடும்பங்களுக்கு தலா ரூ.24,000 வீதம் ரூ.94.08 லட்சம் காசோலையாக வழங்கப்பட்டுள்ளது. 7000 குடியிருப்புதாரர்களுக்கு கருணைத் தொகை வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஏற்கனவே 200 மற்றும் 300 சதுர அடியில் இருந்த குடியிருப்புகளில் பொதுமக்கள் சிரமப்பட்டு வசித்து வந்தனர். அனைவரும் சிரமமின்றி வாழ வேண்டும் என்பதற்காக தற்போது கட்டப்படும் அனைத்து குடியிருப்புகளும் 400 சதுர அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

நம் குடியிருப்பு நம் பொறுப்பு திட்டத்தின் கீழ் குடியிருப்பு நலச்சங்கம் செலுத்தும் தொகைக்கு இணையான தொகை அரசால் வழங்கப்பட்ட வருகிறது. கட்டிடத்தின் தரத்தினை உறுதி செய்ய 3–ஆம் தரப்பு வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் கொய்யாதோப்பு மற்றும் காக்ஸ் காலனியில் கட்டப்பட்டு மறுகுடியமர்வு செய்யும் பணி தொடங்கப்பட்டது. அதனை தொடர்ந்து இன்றைய தினம் நாவலர் நெடுஞ்செழியன் நகர்

மற்றும் சிந்தாதிரிப்பேட்டை ஆகிய திட்டப்பகுதியில் 392 குடியிருப்புதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.94.08 லட்சம் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது.

குடியிருப்புதாரராகிய நீங்கள் அனைவரும் விரைவில் இக்குடியிருப்புகளை காலி செய்யும் பட்சத்தில் புதிய குடியிருப்புகளின் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டு அந்த பணிகளை தொடர்ந்து ஆய்வு செய்து, 18 மாதத்திற்குள் கட்டித் தரப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் ஆட்சியை கடந்த ஒன்றரை ஆண்டு காலம் சிறப்பாக நடத்தி வருகிறார். மக்களின் தேவையை அறிந்து உங்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உழைத்து வருகிறார். அவரது வழியில் நாங்கள் அனைவரும் உங்களுக்காக உழைக்க தயாராக இருக்கிறோம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திரு. மீ.தங்கவேல் இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழு தலைவர் திரு. சிற்றரசு, தேனாம்பேட்டை மண்டல குழு தலைவர் திரு. மதன்மோகன், ராயபுரம் மண்டல குழு தலைவர் திரு. ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் திரு. ஜெகதீசன், தலைமை பொறியாளர் திரு.சண்முகசுந்தரம், வாரிய மேற்பார்வை பொறியாளர் திரு. எஸ்.சந்திரமோகன் , வாரிய நிர்வாகப் பொறியாளர் திரு. எஸ். சுடலை முத்து குமார் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in